புதுச்சேரி அரசு
துணை இயக்குநர் அலுவலகம்(நோய் தடுப்பு)
நலவழித்துறை7
காரைக்கால்

எண். து. இ.அ /கோவிட்-19/ தேதி: 17.06.2020

**செய்திக்குறிப்பு**

காரைக்கால் மாவட்டத்தில் நேற்று (16.06.2020) செய்யப்பட்ட பரிசோதனையில், இருவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இருவரும் சென்னைக்கு சென்று காரைக்கால் திரும்பியவர்கள், அதில் ஒருவர், காரைக்கால் நகர் புறத்தில் உள்ள மேட்டுத்தெருவை சேர்ந்தவர், மற்றொருவர், நல்லம்பல் கிராமப் புறத்தில் உள்ள L.G.R. நகரை சேர்ந்தவர். இருவரும் பெண்கள் அவர்கள் முறையே 26 மற்றும் 50 வயதுடையவர்கள். அவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையில் உள்ள தனிமை படுத்தப்பட்ட வார்டில் அனுமதிக்கப்பட்டு உரிய சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்கள் asymptomatic வகையான நோயாளிகள். அதனை தொடர்ந்து அவர்களிடம் தொடர்புடையவர்கள் விவரங்கள், சம்பந்தப்பட்ட சுகாதார மைய களப்பணியாளர்களைக் கொண்டு திரட்டி, அவர்களை வீட்டுத்தனிமையில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், நகர்புற சுகாதார மையத்திற்குட்பட்ட மேட்டுத்தெரு அதனைச்சுற்றிள்ள பகுதிகள் மற்றும் நல்லம்பல் பகுதியும் தீவிர கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. அப்பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. காவல்துறை, வருவாய் துறை மற்றும் சுகாதார துறையினர் மாவட்ட நிர்வாக அறிவுறுத்தலின் படி கண்காணிப்பு பணியை தொடர்ந்து வருகின்றனர். மேலும்,இவ்வலுவலகத்தின் கீழ் இயங்கும் சம்பந்தப்பட்ட சுகாதார மைய நல ஊழியர்கள் தொடர்பு கண்டறியும் பணியில் ஈடுபடுத்தப்பட்டு யாருக்கேனும் சளித் தொற்று மற்றும் கொரோனா அறிகுறி உள்ளதா எனவும் களப்பணி செய்து வருகின்றனர். அப்படி ஏதேனும் அறிகுறிகள் யாரிடமாவது கண்டறியப்பட்டால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

GOVT. OF PUDUCHERRY
DEPT. OF INFORMATION & PUBLICITY, KARAIKAL

இவண்

துணை இயக்குநர் (நோய்தடுப்பு)
காரைக்கால்